இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in    murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 337 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 02 – சனிக்கிழமை 18 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 337 : Thiruvalluvar Year - 2057 - Aadi 02 - Saturday 18 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## மாநில உரிமைகளைக் காக்கின்ற வகையில் – நாடாளுமன்றத்தில்

# தமிழ்நாட்டு மக்களின் உணர்வாக கழக எம்.பி.க்களின் குரல் ஒலிக்கும்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

### காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற கழக எம்.பி.க்கள் கூட்டத்தில் தீர்மானம்!



லண்டன், ஜூலை 18-

**மாநில உரிமைகளைக் காக்கின்ற வகையில் நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டு மக்களின் உணர்வாக கழக எம்.பி.க்களின் குரல் ஒலிக்கும்! என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்ற கழக எம்.பி.க்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

நேற்று முன்தினம் (16-07-2026) மாலை, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையில், கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

**தீர்மானம் 1:** மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாட்டு விவசாயிகளின் உரிமைகளை நிலைநாட்டிட நடுவர் மன்றம் அமைத்திடுக!

### பெரும் பாதிப்புக்கு உள்ளாகும் விவசாயிகள்!

காவிரி இறுதித் தீர்ப்பின்படி, கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தமிழ்நாட்டிற்குரிய காவிரி நீரைத் திறக்காமல் முரண்டு பிடிக்கும் கர்நாடக காங்கிரஸ் அரசின் சட்டவிரோதச் செயல்பாடுகளாலும், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் கூட்டத்தில் "தமிழ்நாட்டிற்குரிய காவிரி நீரைத் திறந்து விட முடியாது" எனக் கர்நாடகம் தொடர்ந்து வாதிட்டு வரும் சூழல் ஏற்பட்டு, இம்முறை ஜூன் 12-ஆம் தேதியன்று மேட்டூர் அணை திறக்காமல் நம் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதை இக்கூட்டம் வேதனையுடன் பதிவு செய்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தவரை, மேகதாது அணை கட்டுவதற்கான கர்நாடக அரசின் முயற்சிகள் வெற்றிபெற விடாமல் தமிழ்நாடு வெற்றிகரமாகத் தடுத்துள்ளது.

மேகதாது அணையின் 'விரிவான திட்ட அறிக்கையை' காவிரி மேலாண்மை ஆணையத்தில் விவாதிக்காமல் திருப்பி அனுப்பவும், ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் அனுமதி கோரும் விண்ணப்பத்தை சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் பட்டியலில் இருந்தே நீக்கவும் வைத்து, காவிரியில் தமிழ்நாட்டின் உரிமையைப் பாதுகாத்து, காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட முயன்ற கர்நாடகத்தின் அனைத்து முயற்சிகளை யும் முறியடித்தவர்தான் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பதை இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் பெருமிதத்துடன் பதிவு செய்கிறது.

### தலைவரின் கோரிக்கையை ஏற்று மேகதாது அணைக்கு நடுவர் மன்றம்!

அதேநேரத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்படி 'காவிரி நடுவர் மன்றம்' கண்டாரோ, அதேபோல் மேகதாது அணைப் பிரச்சினைக்கும் தீர்வுகாண நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு ஆட்சியில் இருந்தபோதே கோரிக்கை வைத்தார் அப்போதைய முதல்வர். காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டதே காவிரியில் தமிழ்நாட்டின் உரிமைகள் காக்கப்பட முக்கியக் காரணம் ஆகும்.

இப்போது, தமிழ்நாடு சட்டமன்றத்தில் மேகதாது அணைக்கு எதிரான அரசினர் தீர்மானம் முன்மொழியப்பட்டபோது, கழகத் தலைவரின் அறிவுறுத்தலின் பேரில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 'மேகதாது அணைக்கு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும்' என்ற திருத்தத் தீர்மானத்தை முன்மொழிந்து, அவ்வாறே அரசினர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பது தி.மு.க.வின் முயற்சிக்கு கிடைத்த மகத்தான வெற்றி என இக்கூட்டம் பதிவு செய்கிறது.

## மேகதாது அணை – காவிரிப் பிரச்சினைக்காக கழக எம்.பி.க்கள் உரக்க குரல் எழுப்புவர்!

**மேகதாது அணைக்கு நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி தமிழ்நாட்டிற்குரிய காவிரி நீரை எவ்வித தாமதமும் இன்றி கர்நாடக அரசு திறந்து விடுவதையும் ஒன்றிய அரசு உறுதி செய்திட வேண்டும் என மழைக் காலக் கூட்டத் தொடரில் வலியுறுத்திட இக்கூட்டம் தீர்மானிக்கிறது.**

### நாடாளுமன்றத்தில் கழகத்தின் குரல்!

**தீர்மானம் 2:** தமிழ்நாட்டின் நலன்களைப் பாதுகாக்கின்ற வகையிலும் - மாநில உரிமைகளைக் காக்கின்ற வகையிலும், அரசியல்சட்டத்தின் மாண்புக்காக வும் - விழுமியங்களுக்காகவும் எப்போதும் போல் குரல் கொடுக்கவும், அதையொட்டி வரும் அனைத்து விவகாரங்க ளிலும் தமிழ்நாட்டு மக்களின் உணர்வாக தி.மு.க. எம்.பி.க்களின் குரல் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் ஒலித்திடும் என்று இக்கூட்டம் உறுதி செய்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மேலும், இக்கூட்டம் குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு:**

### மேகதாது அணைக்கட்டுக்கு எதிராக நமது குரல் இருக்கும்!

**"நாடாளுமன்ற #MonsoonSession குறித்த கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம்:**

**மேகதாது அணை கட்டும் முயற்சிகளுக்கு எதிராகவும், காவிரியில் தமிழ்நாட்டுக்குள்ள நியாயமான உரிமையைக் காக்கவும் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரத்துக் குரலெழுப்பு வார்கள்.**

**ஒன்றிய அரசு கொண்டு வரும் எந்தப் புதிய சட்டமாக இருந்தாலும் மாநில உரிமைகளையும் அரசியலமைப்புச் சட்டத்தினையும் பாதுகாத்திடும் வகையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலைப்பாடு இருக்கும்.**

**தமிழ்நாட்டு மக்களின் மனசாட்சியாய் ஒவ்வொரு DMK MP-யும் செயல்படுவார்கள்!**

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகள்: த.வெ.க. அரசின் நிலைப்பாடு என்ன?

# 9-ஆம் வகுப்பில் மும்மொழிக் கொள்கையை நிறுத்த வேண்டும்!

## ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்ற நீதிபதிகள் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஜூலை 18-

தமிழ்நாட்டில் நவோதயா பள்ளிகளைத் தொடங்க எதிர்ப்பு தெரிவித்து கடந்த 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தது. கடந்த 5 ஆண்டுகளில் நவோதயா பள்ளிகளை தொடங்க எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. அரசு வாதிட்டு வந்தது. இந்நிலையில், இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஆட்சி மாறியுள்ள நிலையில் தமிழ்நாடு



அரசின் நிலை என்ன? என்று நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். இதுகுறித்து அரசு ஆலோசனை நடத்தி வருவதாகவும், பதிலளிக்க 12 வாரம் அவகாசம் வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு வழக்கறிஞர் தெரிவித்தார். இதனை ஏற்க மறுத்த நீதிபதிகள், 3 வாரத்தில் அரசின் முடிவை தெரிவிக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

மனுதாரரின் வாதத்தின்போது குறுக்கிட்ட நீதிபதி மகாதேவன், தமிழ்நாட்டைப் பொறுத்த வரைக்கும் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும், அவர்கள் இந்தியை எதிர்க்கவில்லை, இந்தித் திணிப்பையே எதிர்க்கிறார்கள் என்று தெரிவித்தார். இதனையடுத்து வழக்கு ஆகஸ்ட் 11ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதனிடையே, சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு மூன்று மொழிக் கொள்கையை கட்டாயமாக்குவது அவர்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர்.

9ம் வகுப்பு மாணவர்கள் பொதுத் தேர்வை எழுத இருக்கிறார்கள், அவர்களுக்கு மும்மொழிக்கொள்கையைத் திணிப்பது மிகுந்த மன அழுத்தத்தை உருவாக்கும் என்பதால், மும்மொழிக் கொள்கையை கொண்டு வருவதை ஒன்றிய அரசு நிறுத்த வேண்டும் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### தமிழ்நாட்டில் 2 நாட்களுக்கு வெப்ப அலை நீடிக்கும் சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை!

*சென்னை, ஜூலை 18-*

*சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,*

*மதுரை, விருதுநகர், திண்டுக்கல், வேலூர், ராணிப்பேட்டை, சேலம், ஈரோடு உள்ளிட்ட 15 மாவட்டங்களில் இன்று வெப்ப அலை நிலவும் என்று எச்சரித்துள்ளது. நாளையும் வெப்ப அலை நீடிக்கும் என்றும் கணித்துள்ளது. மேலும், இன்றும், நாளையும் தமிழ்நாடு கடலோர மாவட்டங்கள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையுடன் அதிக ஈரப்பதமும் இணைந்து காணப்படுவதால், வெப்பம் மற்றும் புழுக்கம் ஏற்படும் என்றும், இதனால், மக்களுக்கு அசௌகரியம் ஏற்படக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

### போராட்டங்கள், மதச் சடங்குகளை நடத்த தடை!

*புதுடெல்லி, ஜூலை 18-*

*நாடாளுமன்ற வளாகத்தில் பதாகைகளுடன் எம்.பி.க்கள் போராட்டம் மற்றும் தர்ணா நடத்துவதற்கு ஒன்றிய அரசு திடீர் தடை விதித்துள்ளது.*

*நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வருகின்ற 20ம் தேதி தொடங்கி, ஆகஸ்ட் 13ம் தேதி வரை நடைபெற உள்ளது.*

*23 லட்சம் மாணவர்களின் கனவை நசுக்கிய நீட் வினாத்தாள் கசிவு, 17 லட்சம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு பிரச்சினையை ஏற்படுத்திய சி.பி.எஸ்.இ. பிளஸ் 2 விடைத்தாள் திருத்தும் பணியில் நடந்த குளறுபடி, பெட்ரோல், டீசல் விலை உயர்வு, அயோத்தி ராமர் கோவில் நன்கொடை முறைகேடு, ஈரான் அமெரிக்கா போரில் 13 இந்தியர்கள் கொல்லப்பட்டது உள்ளிட்ட விவகாரங்களை எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.*

*நாடாளுமன்றத்தை சுமூகமாக நடத்துவது குறித்து ஆலோசிக்க வரும் 19ஆம் தேதி அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் நாடாளுமன்ற வளாகத்திற்குள் ஆர்ப்பாட்டங்கள், தர்ணாக்கள், பதாகைகளை ஏந்துதல், மதச் சடங்குகளை நடத்துதல் ஆகியவற்றில் ஈடுபட வேண்டாம் என்று எம்பிக்களுக்கு மக்களவைச் செயலகம் அறிவுறுத்தியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த முடிவுக்கு பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். பிரதமரால் நாடாளுமன்ற கட்டிடம் திறக்கப்பட்டபோது மேலாடை இல்லாத பூசாரிகளால் செங்கோலுடன் நடத்தப்பட்டது மத நிகழ்வு இல்லையா? என்று திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர் மகுவா மொய்த்ரா கேள்வி எழுப்பியுள்ளார்.*